

## பாவேந்தர் பாரதிதாசன்



| | |
|---|---|
| **பிறப்பு** | சுப்புரத்தினம்<br>ஏப்ரல் 29 1891<br>புதுவை |
| **இறப்பு** | ஏப்ரல் 21 1964 (அகவை 72)<br>சென்னை |
| **புனைப்பெயர்** | புரட்சிக் கவிஞர்,<br>பாவேந்தர் |
| **தொழில்** | தமிழாசிரியர், கவிஞர்,<br>அரசியல்வாதி |
| **இனம்** | தமிழர் |
| **நாட்டுரிமை** | இந்தியர் |

# 2. சிறுத்தையே வெளியில் வா

- பாரதிதாசன்

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகைவிரி! எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி

'திராவிடன்' என்ற பகுதியில் பாரதிதாசனால் எழுதப்பட்ட பாடல், 'சிறுத்தையே வெளியில் வா' என்பதாகும். இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இப்பாடல் இயற்றப்பட்டுள்ளது.

மக்களை அடிமைப்படுத்திய பகைவர்களிடம் இருந்து விடுபட, சீறிவரும் சிறுத்தையாக வேகம் கொண்டு சமூகத்தை நோக்கி வெளிவர வேண்டும். இதுவரை அடைபட்டுக் கிடந்த இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது. உனது வீரத்தை, எலியோடு ஒப்பிட்டு இகழ்ந்தவர் நடுங்குமாறு புலியின் வேகத்தோடு செயல்பட வெளியில் வரவேண்டும். பகற்பொழுதுகூட நள்ளிருளாகத் தெரிந்த வாழ்க்கையை மாற்ற வேண்டுமெனில், வலிமை மிகுந்த சிம்புள் பறவையாக சிறகை விரித்து எழுச்சி கொள்.

சிங்கம் போல வீரம் கொண்டு எதிரியை நோக்கிப் போராட இளைஞனே உன்னை மாற்றிக்கொள். கண்களைத் திறந்து இந்த உலகத்தைப் பார். உனது நாட்டில் இழிவான கழுதையின் ஆட்சி தேவையா? பகைவர்கள் நம்மிடையே பொய்கள் பல பேசி ஏமாற்றி, ஐம்புலன்களையும் அடக்கிச் செயல்படவிடாமல்